REGD. NO. M.:6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 19௳ சனி (1—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 20௳ ஞாயிறு (2—6—57) [இதழ் 303

திட்டத்தின் படப்பிடிப்பு!

புதுடில்லி, மே 30—

இரண்டாவது திட்டத்தின் மதிப்பீட்டையும், அளவையும் எடுத்துக்காட்டி, மக்கள் சபையில் ம. சோ. கட்சி உறுப்பினர் பரூசா பேசுகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குச் செலவிடும் தொகையை உலகத்தில் வாழும் மக்களுக்குப் பகிர்ந்து தருவதாயின் நபருக்கு—ஆண், பெண் குழந்தை உட்பட—ரூ. 20 கிடைக்கும் என்றும், இந்தியாவில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் திட்டத்திற்கான செலவில் தரும் பங்கு என்ன என்று கணக்கிட்டுப் பார்க்கும்போது ரூ. 750 ஆகிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

'அரசியலில் எங்களுக்குச் செல்வாக்கு உண்டு'

'நாங்கள் இருவர்தான் என்றாலும் வலுமிக்க ஒரு அமைப்பின் பிரதிநிதிகளாக வந்திருக்கிறோம்'

'முக்கியப் பிரச்சினைகள் மீது நாங்கள் பேசுவதற்கு சந்தர்ப்பமளிக்காதது ஏன்?

மக்கள் சபையில் ஈ. வெ. கி. சம்பத் முறையீடு!

சபைத் தலைவர் அனந்தசயனத்தின் சப்பைக்கட்டு!

புதுடில்லி, மே 31—

"மக்கள் சபையில் நடைபெற்ற முக்கிய விவாதங்கள் எதிலும் கழக உறுப்பினர்கள் கலந்துகொள்ளுவதற்கான வாய்ப்பு அளிக்கப் படவில்லை" என்று, ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், மக்கள் சபையில் இன்று புகார் கிளப்பினார்.

"இங்கு இருவரே நாங்கள் இருந்தாலும், சென்னை அரசியலில் இடம் பெற்றுள்ள தமிழ் நாட்டின் ஆற்றலையும் பகுதியையும் பிரதிபலிக்கின்றவர்களாவோம்," என்றும் சம்பத் அவர்கள், சென்னை அரசியலில் கழகத்திற்குரித்தான இடத்தையும் எடுத்துக்காட்டினார்.

இதற்கு மக்கள் சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் பின்வருமாறு பதிலளித்தார்:—

"இந்தச் சபையில் உள்ள 500 உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பளிக்க முடியாததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். ஒரு சிலர் நடைபெற்ற மூன்று விவாதத்திலும் பேசுவதற்குக் காத்திருந்திருக்கின்றனர்— (குடியரசுத் தலைவர் பேச்சின் மீது விவாதம், இரயில்வே வரவு-செலவு திட்டத்தின் மீது விவாதம், இந்திய அரசாங்கத்தின் புதிய வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதம்) மேலும் இந்த உறுப்பினர் விஷயத்தில் நான் எந்தவித சலுகையும் காட்ட முடியாது."

அஞ்சல் 'உறையின்' விலை உயருகிறது

புதுடில்லி மே 31—

அஞ்சல் கார்டுகள், உள்நாட்டுப் பார்சல்கள்மீது கட்டண உயர்வு ரத்து செய்யப்படுகிறது; ஆனால் கவர்களின் விலை உயர்த்தப்படுகிறது.

முதல் ஒன்றரை தோலா எடையுள்ள கவர்களுக்கு 15 புதிய காசுகள் அஞ்சல் கட்டணமாக உயர்த்தப்பட்டுள்ளது. (தற்போது 13 புதிய காசுகளே கட்டணமாகும்).

அதற்கும் அதிகமாக ஒவ்வொரு தோலாவுக்கும் 10 புதிய காசுகள் அதிகமாகக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எதிர்ப்புக்குப் பணிவு!

புதுடில்லி, மே 31—

இந்தியப் போரசு மீண்டும் வரிகளைப் பற்றி ஆராய்ந்து சில முக்கிய மாறுதல்களைச் செய்யவும், ஒரு சில வரி உயர்வுத் திட்டங்களை கைவிடவும் முன்வந்துள்ளது.

இரயில் மூலம் செல்பவருக்கு முதல் 15 மைல்வரை கட்டணத்தில் வரி உயர்வு இல்லையாம்!

தீப்பெட்டிகள்மீது விதிக்கப்பட்டுள்ள வரி, உற்பத்தியைப் பாதிப்பதால் சலுகை தரப்படுமாம்!

புதிதாகத் துவங்கப்படும் கம்பெனிகளுக்கு முதல் 5 ஆண்டு காலத்திற்கு 'செல்வ வரி' ரத்து செய்யப்பட்டுள்ளது.

வருமான வரி செலுத்துபவர்களுக்கு 'குழந்தைகள் அலவன்ஸ்' தரப்பட்டுள்ளது.

தி. மு. கழகத்தின் தேர்தல் வெற்றி

காங்கிரசு தலைவர் தேபர் துடை நடுக்கம்!

புதுடில்லி, மே 31—

"இந்தத் தேர்தலில் ஓர் அரசியல் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் உருவெடுத்திருக்கின்றது. அதன் போக்கு நாட்டின் ஒற்றுமைக்கும், நிலை பேற்றிற்கும் பாடுபட்டு வரும் சக்திகளின் வேலைச் சுமையைக் கூட்டுவதாக இருக்கின்றது."

என்று, அ. இ. கா. தலைவர் தேபர், காங்கிரசு கட்சிக்கு வெளியிட்டுள்ள சுற்றறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

"சென்ற தேர்தலை விட சென்னை, இந்தத் தேர்தலில் கொஞ்சம் முன்னேறி இருக்கின்றது" என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதாம்.

இந்தியாவிற்கு ரஷ்ய போர் விமானங்கள்?

நவீன போர் விமானங்களை இந்தியாவுக்கு விற்க ரஷ்யா முன்வந்துள்ளதாம்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியமானவற்றை மட்டுமே தற்போது வாங்கவேண்டும் என்று இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளதாம்.

'இந்த அலங்கோலமான சர்க்கார் அமையவா தியாகிகள் பாடுபட்டனர்?'

'நாள்தோறும் பட்டினிச் சாவைக் காண்பதற்காகவா உழைத்தார்கள்?'

'வரி வளர்ந்தது—மக்கள் வாழ்க்கைத் தரம் சரிந்தது'

'திட்டத்தின் பலனை அனுபவித்தவர்கள் எவரோ?

புள்ளி விவரங்கள் காட்டி பொதுச்செயலாளர் விளக்கம்

29—5—57-ல் அன்று மாலை சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற புதுவரிகள் கண்டனப் போதுக் கூட்டத்தில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய பேருரையின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

வெள்ளைக்காரன் வெளியேறியவுடன், 1948-ம் ஆண்டு வரையில் உள்ள கணக்கையும், 1957-ம் ஆண்டுவரையில் உள்ள இந்தக் 'காருண்ய'மிகுந்தவர்களின் ஒன்பது ஆண்டுகள் கணக்கையும் நீங்கள் கணித்துப் பார்த்தால் இவர்கள் அடிக்கும் கொள்ளையின் அளவு தெரியவரும்.

"வெள்ளைக்கார ஏகாதிபத்திய வெறியன் ஆண்டு விட்டுச் சென்ற காலத்தில் பெட்ரோல் மூலமாக வாங்கப்பட்ட வரி 1-கோடியே 41 இலட்சம் ரூபாய்!

"1957-ல், வரி போட்ட பிறகு இவர்கள் எதிர்பார்க்கிற பணம் பெட்ரோல் மூலம் மட்டும், 32 கோடியே 6 இலட்சம் ரூபாய்

"மண்ணெண்ணெய் மூலம் அவன் விட்டுச் சென்ற காலத்தில் வாங்கப்பட்ட வரி ரூ. 20 இலட்சம்.

"இந்தக் 'காருண்ய'மிக்கவர் வந்த பிறகு வாங்கப்பட்டது வரி மூலம் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய்—சென்ற ஆண்டு கணக்குப்படி! இப்பொழுது மண்ணெண்ணெய் வரி இல்லை என்று சொல்லிவிட்டார்கள்; ஆனால் அடுத்த ஆண்டு வரக்கூடும்!

"சர்க்கரைக்கு 1948-ல் வாங்கப்பட்ட வரி 6 கோடியே 47 இலட்சம் ரூபாய்—இப்பொழுது இவர்கள் ஆட்சியில் 36 கோடியே 45 இலட்சம் ரூபாய்!

"தீப்பெட்டிக்கு வாங்கப்பட்ட வரி 7 கோடியே 31 இலட்சம் ரூபாய்—இப்பொழுது ரூ. 15-கோடி!

"1948-ல், புகையிலை வரி 25 கோடியே 46 இலட்சம் ரூபாய்—இப்பொழுது 40 கோடியே 50 இலட்சம் ரூபாய்.

"தாவர எண்ணெய்கள் வரி 1948-ல் 1 கோடியே 96 இலட்சம் ரூபாய்—இப்பொழுது 3 கோடியே 50 இலட்சம் ரூபாய்!

"காபிக்கொட்டை வரி 1948-ல் 49 இலட்சம் ரூபாய்—இப்பொழுது ஒரு கோடியே 85 இலட்ச ரூபாய்.

"தேயிலை மூலம் வாங்கப்பட்ட வரி 3 கோடியே 66 இலட்சம் ரூபாய்-இப்பொழுது 5 கோடியே 97 இலட்சம் ரூபாய்!

"பருத்தித் துணி இன்றியமையாதது; உணவு இல்லாமல்கூட இருக்கலாம் — உடையில்லாமல் இருக்கமுடியாது. இந்தப் பருத்தித் துணியைப் பொறுத்த வரையிலும் 1948ல் வாங்கப்பட்ட வரிகள் வெறும் 87 இலட்சம் ரூபாய் தான்—இப்பொழுது, இவர்கள் ஆட்சிபீடமேறிய பிறகு 72 கோடி ரூபாய்!

"எவ்வளவு நல்ல சர்க்கார்!

இதற்காகவா படுபட்டார்கள் தியாகிகள்?

இப்படிப்பட்ட சர்க்கார் அமையவா விரும்பினார்கள்-பாடுபட்டார்கள் தியாகிகள்?

"இந்த அளவுக்கு வரிப் பணம் வளர்ந்தும், மக்களின் வாழ்க்கைத்தரம் வளர்ந்ததா?

பார்க்கின்றோம்—பட்டினிச் சாவை!

".அப்பொழுதிருந்த நிம்மதியையும் கவனியுங்கள்—இப்பொழுதுள்ள நிம்மதியையும் கவனியுங்கள்.

"மக்களின் நிலையென்ன? வாழ்க்கையில் இன்பத்தை அதிகமாகக் காணமுடிகிறதா வென்றால், பட்டினிச் சாவைத்தான் அன்றாடம் காணுகிறோம்.

"பட்ட மரங்களிலே பிணம் — பாழுங் கிணறுகளிலே பிணம்—சாலை ஓரங்களிலே பிணம் - சாக்கடைக் குழிகளிலே பிணங்கள் - என்று அன்றாடம் காணுகிறோம்!

ஊரே பிச்சை எடுக்கும்

"வெள்ளைக்கார வெறியன் காலத்தில் பிச்சைக்காரர்கள் தனித் தனியாக வந்தார்கள். இவர்கள் வந்த பிறகு குடும்பம் குடும்பமாக - கணவன், மனைவி, 4 - 5 குழந்தைகள் - இப்படி வருகிறார்கள். இப்பொழுதே ஆரம்பித்துவிட்டது - இனிமேல் பார்க்கலாம் - ஊரே பிச்சை எடுக்கலாம்! அதற்கான நிலைமைகள் வரும்!

தேய்ந்த திட்டங்கள்!

"வரிகள் போட்டு வாழ்க்கைத் தரத்தை காட்டியிருக்கின்றார்களா என்றால், இல்லை. ஆனால், முதல் ஐந்தாண்டுத் திட்டமும் போட்டு, அதற்கு ரூ. 2,500-கோடியும் போட்டு நிறைவேற்றி முடிந்தாய்விட்டது.

"இரண்டாவது திட்டத்திற்கு 'எஸ்டிமேட்' ரூ. 4,800 கோடி அரசாங்க பங்கு; தனிப்பட்டோர் பங்கு ரூ. 1,400 கோடி! இப்பொழுது அந்த ரூ. 4,800 கோடி போதாதென்று கூட்டியிருக்கிறார்கள்; ரூ. 5,600 கோடி இருந்தால்தான் இப்பொழுது

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1—6—57 சனி

மாக்னசைட் சோகக் கதை—(3)

பிரிட்டிஷ் நிறுவனமான மாக்னசைட் சிண்டிகேட் லிமிடெட், அறுபதாண்டுக் கால குத்தகை பெற்றுள்ள மாக்னசைட் நிலப்பரப்பு ஓமலூர் தாலுகாவிலும் சேலம் தாலுகாவிலும் இருக்கிறது. அக்குத்தகை காலம் 1958-ம் ஆண்டு இறுதியோடு முற்றுப்பெறுகின்றது என்பது உறுதியானதாகும்.

அதுபோன்றே மேற்படி பிரிட்டிஷ் சிண்டிகேட்டுக்குச் சொந்தமான சொத்துக்களை, கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி விலை கொடுத்து வாங்கி விட்டிருக்கின்றது என்பது மறக்கமுடியாத உண்மையாகும். அதுவுமன்றி, மேற்படி சிண்டிகேட் குத்தகை எடுத்திருந்த மாக்னசைட் படிந்துள்ள 4,500 ஏக்கர் நிலப்பரப்பை, தனக்குக் குத்தகைக்குத் தர வேண்டும் என கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி முயற்சித்துக் கொண்டு இருப்பதும் மறக்கமுடியாத உண்மையாகும். அதுவுமல்லாது, மேற்படி விவாதத்திலுள்ள மாக்னசைட் நிலப்பரப்பிலிருந்து மாக்னசைட் வெட்டியெடுப்பதை சென்னை அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாது என டெல்லி ஆதிபத்தியம் சென்னை அரசாங்கத்தைக் கட்டிபோட்டு வருவதும் முக்காலும் உண்மையாகும்.

இந்த அளவுடனும் பிரிட்டிஷ் கம்பெனி அனுபவித்து வரும் மாக்னசைட் சுரங்கத்தின் சோகக் கதை இருந்துவிடவில்லை. இதுவரை பிரிட்டிஷ் கம்பெனி அனுபவித்துவரும் உரிமையை, கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கே விட்டுவிட வேண்டும் என்றும் சென்னை அரசாங்கத்தை, டில்லி ஏகாதிபத்தியம் வற்புறுத்திவருகிறது என்பதும் நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

இவ்விவகாரம் குறித்து மக்கள் சபையில் கேள்வி கிளப்பப்பட்டிருக்கிறது. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற நிதியில் மத்திய அரசின் சார்பில் கூறப்பட்ட பதில் இருக்கவில்லை. நிலைமையைக் குழப்பும் வகையிலேயே அமைச்சரின் பதில் அமைந்திருக்கின்றது. நிற்க,

மாக்னசைட் சிண்டிகேட் அனுபவித்துவரும் நிலப்பரப்பின் குத்தகைக் காலம் அடுத்த ஆண்டுடன் முடிவு பெறுகிறதா என, மத்திய அரசை, மக்கள் சபையில் கேட்கப்பட்டது. அதற்கு சுரங்க மந்திரியான மாளவியா, அடுத்த ஆண்டு குத்தகை முடிவுறவில்லை என்று பதில் அளித்துள்ளார்.

ஆனால் சேலம் முக்கியஸ்தர்கள் சிலர் கையொப்பமிட்டு முதலமைச்சர் காமராசருக்கு மேற்படி மாக்னசைட் விவகாரமாக அளித்துள்ள விண்ணப்பத்தில், குத்தகை காலம் 1958-ம் ஆண்டோடு முடிவு பெறுவதாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பத்தில்தான், பிரிட்டிஷ் கம்பெனியான மாக்னசைட் சிண்டிகேட், தனது சொத்தையும் உரிமையையும், கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கு இலாபகரமாக விற்றுவிட்டிருப்பதும் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சேலம் முக்கியஸ்தர்கள் மனு மேற்படி உண்மைகளை வெளிப்படுத்தியிருப்பதுடனும் இருந்துவிடவில்லை. மாக்னசைட் சிண்டிகேட்டிடமிருந்து கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி, மாக்னசைட்டை வெட்டியெடுக்கப் பெற்றுள்ள உரிமை, சென்னை அரசாங்கத்துடன் சிண்டிகேட் முன்புசெய்து கொண்டுள்ள நிலக் குத்தகை நிபந்தனைகளுக்கு முரண்பட்டது என்றும் முக்கியஸ்தர்கள் மனு சுட்டிக்காட்டியிருக்கிறது. அது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்ற நியாயத்தையும் மேற்படி மனு வலியுறுத்தியுள்ளது.

அம்முக்கியஸ்தர்கள் மனு, மேற்படி நிலப்பரப்பில் மாக்னசைட்டை வெட்டி எடுப்பதையும், அதைக் தொழில்படுத்துவதையும் சென்னை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. அதுவுமன்றி, அப்பணியினை பிற மாநிலத்தவர்களிடம் ஒப்படைக்கக்கூடாது எனக் கோரியும் உள்ளது.

அத்தகு கருத்தறிவிப்புடன் இருந்துவிடாது, பல காரணங்களால் மேற்படி பணியினை ஏற்று நடத்த சென்னை அரசாங்கத்தால் இயலாதுபோகுமானால், சென்னை மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பற்றுடைய, சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்களிடை, அப்பணியினை ஒப்படைக்க வேண்டும் என்றும் அம்மனு முறையிட்டுள்ளது.

19—2—57 பிற்பகலில் தர்மபுரி வழிப்போக்கர் விடுதியில், முதலமைச்சர் காமராசர் அவர்களிடம் அவ்விண்ணப்பம் நேரில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்றரை திங்கள் கழித்து அவ்விண்ணப்பத்திற்கு சென்னை அரசாங்கம் பதில் அளித்துள்ளது.

அந்தப் பதில் மிக மிகச் சுருக்கமாக இருக்கிறது. மாக்னசைட் சிண்டிகேட் பெற்றுள்ள மாக்னசைட் வெட்டியெடுக்கும் குத்தகை உரிமையை கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கு அளிப்பதில்லை என சென்னை அரசாங்கம் முடிவு கட்டிவிட்டது என்று அரசாங்க பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அத்துடன், அரசாங்கமே தொழில்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்றும் அப்பதில் தெரிவிக்கிறது.

ஓமலூர், சேலம் தாலுகாக்களில் மாக்னசைட்டை வெட்டியெடுக்க பிரிட்டிஷ் கம்பெனியான மாக்னசைட் சிண்டிகேட் பெற்றிருக்கும் குத்தகை உரிமையை தனக்களிக்க வேண்டும் என, கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி சென்னை அரசாங்கத்தைக் கோரி இருக்கிறது என்ற உண்மை, சென்னை அரசாங்கப் பதிலிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அதைக் கொண்டு, மாக்னசைட் சிண்டிகேட் பெற்றுள்ள குத்தகை காலம் விரைவில் முற்றுப்பெற இருக்கின்றது என்பதும், மேற்படி சிண்டிகேட்டின் சொத்தை கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி விலைக்கு வாங்கி விட்டிருக்கின்றது என்பதும், சாதாரண அறிவு படைத்திருப்பவர்களாலும் யூகித்துக்கொள்ளக்கூடியதேயாகும்.

சேலம் முக்கியஸ்தர்கள் விண்ணப்பமும், அதற்கு சென்னை அரசாங்கம் அளித்துள்ள பதிலும், மாக்னசைட் சிண்டிகேட்டின் குத்தகை காலம் முடிவுறுவதையும், சிண்டிகேட்டின் சொத்தை கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனி விலைக்கு வாங்கிவிட்டிருப்பதையும் ஒளிவு மறைவு இல்லாமல் ஒப்புக்கொண்டுள்ளன. ஆனால், இந்தியப் பேரரசோ, அதற்கு மாறாக, மேற்படி விவகாரமாக ஒன்றுமே தெரியாது என்று மக்கள் சபையில் பசப்பி இருக்கின்றது.

'கெட்டிக்காரன் புளுகு எட்டே நாளில் அம்பலமாகிவிடும்' என்பார்கள். இந்தியப் பேரரசின் கூற்றும் என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு வெளிப்பட்டுத்தானே ஆக வேண்டும்.

இந்தி ஆதிக்கம் வளரத் திட்டம்

தமிழ் நாட்டின் மீது மத்தியப் பேரரசின் கண்ணோட்டம்?

சென்னை, மே 30—

சென்னை மாநிலத்தில் 1957—58-ம் ஆண்டில் இந்தி பிரச்சாரத் திற்காக இந்தியப் பேரரசு ரூ. 1 இலட்சம் தர முன்வந்துள்ளதாம். இதைத் தவிர மாநில அரசாங்கமும் இந்திக்குப் பணம் செலவிடுமாம். தற்போது இந்திமொழி ஆசிரியர் பயிற்சி பெறும் 60 மாணவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்து வருகிறதாம்.

வடவர் புகுவதற்கு இந்தத் திட்டமா?

நிபந்தனையை நீக்குவதற்குக் காரணம் என்ன?

மாநிலங்களில் அரசாங்கத் துறையில் பணியாற்றுவதற்கு அந்தந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்கே உரிமை இருக்க வேண்டும்; என்ற நிபந்தனையை நீக்கி, 'யார் வேண்டுமானாலும் எந்த மாநிலத்திலும் பணியாற்றுவதற்கு வசதியளிக்கும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தியாவிற்கு மேலும் 56 புதிய கப்பல்கள்!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் 3,00,000 டன்கள் எடையுள்ள சாமான்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டுவர மேலும் 56 புதிய கப்பல்களை வாங்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது" என்று, மக்கள் சபையில் போக்குவரத்து அமைச்சர் இராஜ்பகதூர் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் நிறுவன அமைப்பில் முக்கியமான திருத்தங்கள் செய்வதன் மூலம் காங்கிரசை 'உயிருள்ள சக்தி' உள்ளதாகச் செய்யப்படுகிறதாம்! இந்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

சட்ட மறுப்பு இயக்க எதிரொலி?

இலங்கை அரசாங்கத்தின் புதிய உத்திரவு

இலங்கை, மே 30—

இலங்கை பெடரல் கட்சி, தமிழ் பேசப்படும் பகுதிகளுக்கு சுயஆட்சி கோரி ஆகஸ்டு மாதத்தில் சட்ட மறுப்பு இயக்கம் நடத்தப் போகிறதல்லவா?

இதன் காரணமாக இலங்கையிலிருந்து வெளியே செல்லும் மக்களுக்கு அனுமதி (பாஸ் போர்ட்) வழங்குவதைக் கட்டுப்படுத்துவதென இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

குறைந்த வருமானக்காரர்களுக்கு

குடியிருப்புத் திட்டம்

சென்னை, மே 30—

குறைந்த வருமானக்காரர்களுக்குக் குடியிருப்புத் வசதித் திட்டத்தின்கீழ் நகரசபை உள்பட எல்லா நிறுவனங்களுக்கும் கடன் வழங்க 1957—58ம்- ஆண்டிற்கு ரூ $7\frac{1}{2}$ இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொகையில் சென்னை நகரசபை கட்டியிருக்கும் 300 வீடுகளுக்காக ரூ. $3\frac{1}{4}$ இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

சென்னைக்கு மத்திய அரசாங்கம் வழங்கிய கடன் உதவி

இக்குடியிருப்பு வசதித் திட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கம் சென்னைக்கு ரூ. 87,29,000 கடனாக ஒதுக்கியிருக்கிறதாம்.

பல்வேறு மாநிலங்களுக்குமாக இந்தியப் பேரரசு இத்திட்டத்தின் கீழ் 1956—57 இறுதிவரையில் ரூ. 17,42,82,000 கடன் தொகைகளாக அனுமதித்திருக்கிறது.

இந்தியாவைச் சுற்றிப்பார்க்க வரும் அமெரிக்கர் எண்ணிக்கை

அதிகரித்துள்ளதாகத் தகவல்

புதுடில்லி, மே 31—

இந்தியாவைச் சுற்றிப்பார்க்க அமெரிக்காவிலிருந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாம்!

"1951-ல் மொத்தம் 3,500 அமெரிக்கர்களே இந்தியா வந்துள்ளனர்; ஆனால், 1955-ல் மொத்தம் 11,028 பேர் இந்தியாவிற்கு வந்துள்ளனர்"

என்று, மக்கள் சபையில் மத்திய அமைச்சர் இராஜபகதூர் தெரிவித்துள்ளார்.

ஒரு வாளி தண்ணீர் ஒரு ரூபாய்!

அசாம் மாநிலத்தில் உள்ள லம்டிங் என்னும் ஊரில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாம்!

இந்தப் பகுதிக்கு தண்ணீர் வசதியை அளித்துவந்த ஆறு கூட வரண்டு கிடக்கிறதாம்!

அதனால், இந்தப் பகுதியில், ஒரு வாளி தண்ணீர் ஒரு ரூபாய் வீதம் விற்கப்படுகிறதாம்!

கல்விச் சீரமைப்பு திட்டத்தில் குழப்பம்?

புதுடில்லி, மே 30—

செகண்டரி கல்விக்கான புதிய திட்டத்தை மேற்கொள்ளும்படி எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாம். சில மாநிலங்களில் 1955-56-ல் இந்த திட்டம் அமுல் நடத்தப்பட்டுள்ளதாம்.

இது குறித்து, மக்கள் சபையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மத்திய அமைச்சர் டாக்டர் மாலி, இந்த இடைநிலைக் கல்வி சீரமைப்பு ஒரு நீண்ட காலத் திட்டம் என்றும் எனவே எந்த மாநிலத்திலும் சீரமைப்பு பூர்த்தியடையவில்லை என்றும் கூறியுள்ளார்.

உரிமை கோரி வேலை நிறுத்தம்

100 தொழிலாளர் கைது

கட்டாக், மே 29—

ராஜ்கங்பூர் சிமெண்டுத் தொழிற்சாலையைச் சேர்ந்த 3,000 தொழிலாளர்கள் இம்மாதம் 24-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்துவருகின்றனராம்.

இந்தத் தொழிற்சாலையை அரசாங்கம், டால்மியா—ஜெயின் நிறுவனங்கள் கூட்டாக நடத்தி வருகின்றனவாம்.

வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், தொழில் நீதி மன்றம் தீர்ப்பளிக்கும் வரையில் இடைக்கால ஊதிய உயர்வு தர வேண்டுமென்றும், வேலையிலிருந்து நீக்குதல், அதிக நேர வேலை ஆகியவை சம்பந்தமான தகராறுகளை தொழில் மன்றத் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று அவர்கள் கோரியிருந்தனர்.

வேலை நிறுத்தம் ஆரம்பமானதிலிருந்து ஆண்கள் பெண்கள் உள்பட மொத்தம் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

சென்னை சர்க்காரின் அவசரக்கோலம்!

இடவசதிப் பிரச்சினையில் நெருக்கடியான கட்டம்!

சென்னை, மே 32—

சென்னை சட்டசபை உறுப்பினர்களின் (பழைய—புதிய) விடுதிகளையும், உணவு விடுதியையும், நூல் நிலையத்தையும், மற்றும் சட்டசபை அலுவலகத்தையும் சட்டசபைத் தலைவர் யு. கிருஷ்ணாராவ் மேற்பார்வையிட்டுள்ளார்.

சென்னை சட்டசபை கூடுமிடத்தை கோட்டையிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்படுவதை எதிர்த்து எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்தும்கூட சென்னை அரசாங்கம் பிடிவாதமாக சட்டசபையைக் கோட்டைக் கட்டிடத்திற்கு மாற்றி விட்டதல்லவா?

இப்போது சட்டசபையையும் மற்ற அலுவலகங்களையும், நூல் நிலையம், விடுதி, சிற்றுண்டிச் சாலை ஆகியவற்றையும் கோட்டைக் கட்டிடத்திற்கு மாற்ற இயலாத நிலையில் சென்னை அரசாங்கம் தவிக்கிறதாம்.

இவற்றிற்கெல்லாம் கோட்டையில் போதிய இடவசதி இல்லை என்பதை இப்போது வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாம்.

அதனால், பழைய அரசாங்க மாளிகையிலுள்ள அலுவலகங்கள் கோட்டைக்கு மாற்றப்படமாட்டாதாம். போதிய இடவசதி ஏற்படும் வரையில் அவைகள் இப்போதுள்ள இடத்திலேயே பணியாற்றுமாம்!

சர்க்கரை ஆலை

ஊழியருக்கா ஊதிய போர்டு?

புதுடில்லி, மே 30—

சர்க்கரை ஆலை ஊழியருக்கு போர்டு நிறுவுவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக மத்திய உதவி தொழில் அமைச்சர் அபீத் அலி தெரிவித்தார்.

சேதி, கேட்டீரா?

புதுடில்லி, மே 30—

1957 ஜனவரி முதல் ஏப்ரல் வரை கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட தங்கத்தின் மதிப்பு ரூ. 34,06,831 என்றும், 32,864 தோலா எடையுள்ள தங்கத்தையும், 1,845 சவரன்களையும் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர் என்றும், மொத்தம் 417 தடவைகளில் அவை கைப்பற்றப்பட்டன என்றும் நிதி அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

'கோடிக்கணக்கான ரூபாய் செலவில் ஆடம்பர ஓட்டல்களைக் கட்டுவதா?'

சிக்கனம் குறித்து உபதேசம் செய்வோர் முதலில் தங்களைத் திருத்திக் கொள்ளட்டும்

புதுடில்லி, மே 29—

"மக்களிடம் தியாகத்தையும், சிக்கனத்தையும் எதிர்பார்ப்பது நியாயமானதேயாகும்; ஆனால், அரசாங்கமும் அதே நேரத்தில் அந்தக் குறைகள் இல்லாத நிலையில் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

"ஒருபுறத்தில், கோடிக்கணக்கான செலவில் ஆடம்பரமான ஓட்டல்கள் கட்டப்படுகிறது; மற்றொருபுறம், அதிகமாக உணவு உட்கொள்வதை மக்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.

"மாதந்தோறும் ரூ. 2,000-க்கு அதிகமாக ஊதியம் பெறும் மத்திய-மாநில சர்க்கார் அதிகாரிகளின் ஊதியத்தில் 15 சதவிகிதத்தைக் குறைப்பது, திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உதவுவதாகும்"

என்று, வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது மக்கள் சபையில், காங்கிரஸ் உறுப்பினர் தாகூர்தாஸ் பர்காவா, அரசாங்கத்தின் வீண் செலவுகளையும், தவறுகளையும் சுட்டிக் காட்டிப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நாசர் தலைமையில் 'தேசிய சங்கம்'

இலட்சியங்களை நிறைவேற்ற பணியாற்றி வருமாம்

கெய்ரோ, மே 31—

எகிப்தின் பொருளாதார—அரசியல்—சமுதாயப் புரட்சி நோக்கங்களைக் கைவிடாது காப்பாற்றி வரவும், அதன் இலட்சியங்கள் நிறைவேற செய்யவும் 'தேசிய சங்கம்' ஒன்றை நாசர் நிறுவியுள்ளார். இதன் தலைவராக நாசர் பணியாற்றுவார்.

எகிப்தில், அரசியல் கட்சிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் அமுலில் இருக்கும்வரையில் இந்த 'தேசிய சங்கம்' இத்துறையில் அதிகாரப் பொறுப்பில் பணியாற்றும்.

இந்த அமைப்பே சட்ட சபைக்கு ஆட்களை நியமனமும் செய்யுமாம்.

ஆபத்து! ஆபத்து!

உதட்டுச் சாயத்திற்கு வரி விதிக்க யோசனை!

"பெண்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ளப் பயன்படுத்தும் 'லிப் ஸ்டிக்' (உதட்டுச் சாயம்) மீது வரி விதிக்கலாமே" என்று மக்கள் சபையில் யோசனை கூறப்பட்டுள்ளது.

அந்த யோசனையை கூறியது மிஸ் வேதகுமாரி என்ற பெண் உறுப்பினர் என்பதும், இதை சீமான் குடும்பப் பெண்களே பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'முதல் திட்டத்தின் விளைவு என்ன?'

'அரசாங்கம் ஏன் அறிக்கை வெளியிடவில்லை?'

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி குரலெழுப்புகிறார்

புதுடில்லி, மே 29—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளை உறுதியாக-வெற்றிகரமாக நிறைவேற்ற இயலுமா என்பது இன்னும் சந்தேகத்திற்கு இடமாக உள்ள நிலையில், நாட்டு மக்கள் தாங்கமுடியாத அளவிற்குத் தொல்லைகளை ஏற்கவேண்டும்என்று வற்புறுத்துவது திகைப்பைத் தருவதாக இருக்கிறது" என்று, வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது மக்கள் சபையில் டாக்டர் ஏ. கிருட்டிணசாமி சுட்டிக் காட்டி, புதிய வரிகளைக் கண்டித்துள்ளார்.

"முதல் ஐந்தாண்டு முடிந்து ஓராண்டு காலமாகியும், அந்தத் திட்டம் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற அறிக்கையை இன்னும் மத்திய அரசாங்கம் வெளியிடவில்லை". என்ற நிலையை அவர் அம்பலமாக்கி, 'திட்டத்தின் வேகத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்' என்றும் எடுத்துரைத்துள்ளார்.

வங்கமெங்கும் கண்டனக்கணைகள்!

புதுவரிகளை எதிர்த்து வேலைநிறுத்தம்

கல்கத்தா, மே 30—

விஷம்போன்று உயர்ந்துவரும் பண்டங்களின் விலையைக் கண்டித்தும், மக்களின் நல்வாழ்வை நாசமாக்கும் புதுவரி விதிப்புகளைக் கண்டித்தும், மேற்கு வங்கத்தில் 12 மணி நேரம் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

வண்டிகள் எதும் ஓடவில்லை; பஸ்களும் நின்றுவிட்டன. ஷீல்டா, ஹௌரா இரயில் நிலையங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. பல இரயில்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

துறைமுக ஊழியர் எவரும் வேலைக்குச் செல்லவில்லை.

ஜனதா, டில்லி எக்ஸ்பிரஸ் வண்டிகள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. தண்டவாளத்தில் உட்கார்ந்துக் கொண்டு மறியல் செய்துள்ளனர்.

இந்தப் பொது வேலைநிறுத்தம் மிகவும் கட்டுப்பாடாக எவ்வித குழப்பத்திற்கும் இடம் தராத முறையில் வெற்றிகரமாக நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

காலங் கடந்த நடவடிக்கை!

கொள்ளை இலாபக்காரர்களை ஒடுக்குவதற்குச் சட்டம்?

புதுடில்லி, மே 30—

வியாபாரிகள் உணவு பொருள்களைப் பதுக்கி கொள்ளை இலாபமடிப்பதைத் தடுப்பதற்கான ஒரு சட்டத்தை மத்திய அரசாங்கம் மக்கள் சபையில் கொண்டுவரவிருக்கிறது.

மூன்று மாத சராசரி விலையைக் கணக்கெடுத்து அதன்படி அரசாங்கமே உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு இந்தச் சட்டம் அதிகாரமளிக்கிறது.

தி. மு. கழகத் தலைமையில் மக்கள் கண்டனக் குரல்

புதுவரிவிதிப்புக்கு எதிராக பட்டிதொட்டிகளெங்கும் மக்கள் அணிவகுப்பு

தி. மு. கழக தலைமை நிலையத்தின் அறிக்கைக்கிணங்க, தமிழகமெங்கணும், புது வரி விதிப்புக் கண்டன நாள் 26—5—57 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது.

அந்த மகத்தான கண்டன நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

தேசூமுகப்பேட்டை:

26—5—57ல், திருக்கழுக்குன்றம் அடுத்த தேசுமுகப்பேட்டை தி. மு. கழகச் சார்பில், தோழர் ரா. அருணகிரி தலைமையில் கண்டன ஊர்வலமும், தோழர் மா. ஆறுமுகம் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் சு. ஆட்சிலிங்கம், கி. குப்பன், க. குப்புசாமி, தா. முத்துசாமி, மு. இராவணன், சு. குருநாதன், ஆ. இரத்தினவேலு ஆகியோர் புதுவரிகளை எதிர்த்துப் பேசினர்.

நாகூர்:

26—5—57 மாலை 4 மணியளவில், தி. மு. கழகச் சார்பில், நாகூர் கோட்டகம் பப்ளிக் ரோடு கழகக் கட்டிடத்திலிருந்து கண்டன ஊர்வலம் புறப்பட்டு வரிவிதிப்பு கண்டன ஒலிகளை முழக்கிக்கொண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று கடைத்தெரு படிப்பகத்தை அடைந்தது. மாலை 6½ மணிக்கு, தோழர் க. மாரியப்பன் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் புதுவரிகளை கண்டித்து 2 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

முசிறி:

26—5—57 மாலை முசிறி தி. மு. கழகச் சார்பில் நடந்த 'புது வரிகள் கண்டன நாள்' பொதுக்கூட்டத்தில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சின்னமனூர்:

26—5—57 மாலை 5½ மணிக்கு இவ்வூர் முத்தாலம்மன் கோவிலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக வந்த பின்பு மேற்படி இடத்திற்கே வந்து சேர்ந்தது. அங்கு தோழ க. மயில் (தலக்கு) தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர் இராமையா பேசிய பின்பு, தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

திருத்துறைப்பூண்டி:

26—5—57ல், வரி எதிர்ப்புக் கண்டன நாள் பொதுக்கூட்டம் தோழர் செயராமன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் பலர் பேசிய பின் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

பூலாங் குளம்:

26—5—57 இரவு 7 மணிக்கு, தோழர் ச. வ. சாமி அவர்கள் தலைமையில் தி. மு. கழகச் சார்பில் புதிய வரிகளை எதிர்த்து ஓர் கண்டன ஊர்வலம் நடைபெற்றது; இரவு 8-30 மணிக்கு, தோழர் நா. மாரிமுத்து அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் கலைவாணன் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசினார்; தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

தொடையூர்:

26—5—57 இரவு 8 மணிக்கு தொடையூர் தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, புது வரிகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொட்டியம்:

26—5—57ல், தோழர் வை. பரமசிவம் தலைமையில் கண்டன ஊர்வலமும், தோழர் வெ.வீராச்சாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. தோழர்கள் அன்பழகன், வை. பரமசிவம், சமீபத்தில் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து விலகி தி. மு. கழகத்தில் சேர்ந்த ரெங்கநாதன் ஆகியவர்கள் புது வரிகளைக் கண்டித்துப் பேசினர். சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அம்மன்புரம்:

26—5—57 மாலை 5 மணிக்கு, அம்மன்புரம் தி. மு. கழகத்தினர் புது வரிகளைக் கண்டித்து, ஒலி முழக்கங்களுடன் மாபெரும் ஊர்வலம் வந்தனர்.

கீரப்பாளையம்:

26—5—57-ல், தி. மு. கழகச் சார்பில் வரி எதிர்ப்பு நாள் கொண்டாடப்பட்டது. கமிட்டிக் கூட்டத்தில் வரி எதிர்ப்பு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புவனகிரி:

26—5—57-ல், தி. மு. கழகச் சார்பில், வரி எதிர்ப்பு நாள் கொண்டாடப்பட்டது. புதிய வரிக் கொடுமையின் காரணங்களை விளக்கி துண்டு அறிக்கைகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது. கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சிதம்பரம்:

26—5—57-ல், 2-வது கிளைக் கழகத் துவக்க விழாவும், சிதம்பரத்தில் இரண்டாவது தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டமும், வரி எதிர்ப்பு நாளும் கொண்டாடப்பட்டது. அது போது, தோழர்கள் தில்லை-வில்லாளன், பொன். சொக்கலிங்கம், சண்முகம், கே.எம். வேலு, இரெ. இளம்வழுதி, மற்றும் பலர் புதிய வரி விதிப்புப் பற்றிப் பேசினர்.

திருவையாறு:

26—5—57 மாலை 5 மணிக்கு, புதுவரிகள் கண்டன ஊர்வலம் தோழர் டி. கே. ராமையா அவர்கள் தலைமையில் புறப்பட்டு நகர வீதிகளில் சுற்றி வந்து இரவு 7-30 மணிக்கு முடிவுற்றது.

குரியமுத்தூர்:

26—5—57 இரவு 8 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. ஆர். சண்முகம் தலைமையில் தோழர்கள் எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம்-பழனிச்சாமி, தங்கமாணிக்கம், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் வரி உயர்வைக் கண்டித்துப் பேசினர். வரி உயர்வைக் கண்டித்துத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பண்ணைக்காடு:

26—5—57 இரவு 7 மணியளவில், புதிய வரி விதிப்பிற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மாபெரும் ஊர்வலம் நடைபெற்று முடிவில் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

செந்தவிர்புரம்:

26—5—57 காலை 8 மணியளவில் இவ்வூர் கே. வி. கே. சாமி படிப்பகத்தில் புது வரி கண்டன கூட்டம் தோழர் து. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றது. புது வரிகளை கண்டித்து தோழர்கள் செல்வராசு, மருதநாயகம் சொற்பொழிவாற்றினர். தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

சேவூர்:

26—5—57 இரவு 7 மணிக்கு, கழக அலுவலகத்திலிருந்து தோழர் எம். பி. கோவிந்தராசு தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்றது. பின் கழக அலுவலகத்தில் தோழர் எம். புட்பநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆண்டார்கோட்டாரம்:

25—5—57 இரவு 9 மணியளவில் ஆண்டார் கொட்டாரம் (மதுரை மாவட்டம்) செஞ்செழியன் மன்றத்தின் சார்பில் தோழர் இராமசாமி தலைமையில் ஒரு கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. எஸ். சந்தானம், மா. பாண்டியன், பி. சந்தானம், காரணம், சந்திரன், கே. பி. எஸ். பச்சையப்பன், முதலியோர் பேசினர். திரு. நாராயணன் வரவேற்புரைத்தார். கூட்ட முடிவில் தோழர் தாளமுத்து மறைவிற்கும் இரங்கியும், புதுவரிகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ப. புளியங்குளம்:

26—5—57 இரவு 8 மணிக்கு, தோழர் என். எம். சேகன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் மு. தயாநிதி, வீருச்சாமி மற்றும் பலர் பேசினர்.

பரமக்குடி:

26—5—57 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் புதுவரிக் கண்டன ஊர்வலம் தோழர் டி. கே. சிறைமீட்டான் தலைமையில் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக வந்து, கழகக் கட்டிடம் வந்து சேர்ந்தது; அங்கு கண்டனத் தீர்மானமும், தூத்துக்குடி தோழர் கே. தாளமுத்த அவர்களுக்கு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அழிவுப் பாதைக்கு இறுதிச் சாதனம்!

பாதுகாப்பு அமைப்புகளை குறிதவறாது தகர்த்துவிடுமாம்

வாஷிங்டன், மே 31—

போட்டியிட்டுக்கொண்டு அணு ஆயுதச் சோதனைகளை நடத்தி வரும் வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்கா, இப்போது எல்லாவற்றிற்கும் இறுதியானதொரு குண்டைக் கண்டுபிடித்துள்ளதாம். அந்தக் குண்டு ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குப் பாயுமாம்! அதன் பெயர் ஐ. சி. பி. எம். என்பதாம்!

இந்தக் குண்டு இயக்கிவிடப்படும் தளத்திலிருந்து 700 மைல் உயரத்திற்குச் சென்று, தென் கிழக்கு முகமாக 2,200 மைல்கள் பறந்து செல்லுமாம்; பறந்துகொண்டிருக்கையில் அதன் போக்கைக் கீழே கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார்களாம்!

இந்தக் குண்டு இன்று இயக்கி விடப்படுமென தெரியவருகிறது.

'மார்ட்டின் புள்பப்' என்ற மற்றொரு புதிய பறக்கும் குண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தக் குண்டின் எடை 600 இராத்தலாம்! குண்டின் உயரம் 11 அடி இருக்குமாம்!

எதிரிகளின் பாதுகாப்பு அமைப்புகளை இந்தக் குண்டின் மூலம் குறிதவறாமல் தாக்கித் தகர்த்துச் சிதறடித்துவிட முடியுமாம்!

அ. இ. மூன்றாவது பிரிவு தபால் ஊழியர் சங்கம்

சென்னை, மே 29—

அகில இந்திய தபால் ஊழியர் சங்கத்தின் மூன்றாவது பிரிவு சென்னை நகர தென் பகுதி மாநாடு 26—5—57 நடைபெற்றுள்ளது.

சென்னை, நகரம் 'எ' வகுப்பு அந்தஸ்தை பெறச் செய்ய வேண்டும் என்று மாநாட்டில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

1957-58-ம் ஆண்டிற்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

புள்ளிவிவரங்காட்டிபொதுச்செயலாளர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போட்ட திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற அளவில் கூட்டியிருக்கிறார்கள்.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி ஆரம்பத்தில் ஒரு மனிதனுக்கு சராசரி வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 269; அது, 1948 முதல் 1954 வரை அதே அளவில் இருந்ததாகத் தான் கணக்கு!

சிந்தியுங்கள் — சிந்தியுங்கள்!

"நான் அனைவரையும் சிந்திக்கச் சொல்லுகின்றேன்-பொருளாதாரம் தெரிந்தவர்களையெல்லாம் சிந்திக்கச் சொல்லுகின்றேன்—படித்தறிந்தவர்கள் உணரச் சொல்லுகின்றேன்—'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிய பிறகு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது?' என்று!

பலனை அனுபவித்தவர்கள்

"முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறினால் அவர்கள் எதிர்பார்க்கும் ஒரு மனிதன் ஓராண்டு சராசரி வருமானம் ரூ. 281—இது இவர்கள் கணக்கு! ஆனால், இந்த ஆண்டு புள்ளி விவரம் என்ன சொல்லுகின்றதென்றால், ஒரு மனிதனின் சராசரி வருமானம் ரூ 262! 1954-ல் ரூ. 269 ஆக இருந்தது — இப்பொழுது ரூ. 262 ஆக குறைந்திருக்கிறது. ஆனால் திட்டத்தில் இவர்கள் எதிர்பார்ப்பது ரூ. 281. ஆனால் 1948-ல் நாடு எப்படியிருந்ததோ, அப்படியே இன்றைக்கும் இருக்கிறது நாடு! திட்டம் நிறைவேறி ஆகிவிட்டது—பலனை அனுபவித்தவர்கள் அனுபவித்தாகிவிட்டது.

வருமானத்தின் லட்சணம்

"மற்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்—1961-ல் எவ்வளவு சராசரி வருமானம் எதிர்பார்க்கிறார்கள் என்றால் ரூ. 331; மூன்றாவது திட்டத்தில்—1966-ல் ரூ. 369; நான்காவது திட்டத்தில்—1971-ல் ரூ. 466; ஐந்தாவது திட்டத்தில் - 1976-ல் ரூ. 546.

"ஆனால், அமெரிக்காவில் ஒரு மனிதனின் சராசரி வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 9,000-க்கு மேல்; பிரிட்டனில் ரூ. 4,000-க்கு மேல்; ரஷ்யாவில் ஏறத் தாழ ரூ. 5,000!

"இங்கு ரூ. 262; இன்னும் 20 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.-546. திட்டம் வளருகிறது. இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் திட்டத்தை அறிந்துகொள்ளவே விளக்கினேன்.

மத்திய சர்க்காரல்ல — மாநில சர்க்கார்கள்கூட!

"இந்த வரிகள் இந்த வருடத்தோடு நின்றுவிடும் என்று கருதி விடாதீர்கள்; இந்திய சர்க்கார் மட்டும் போட்டுவிட்டார்கள் என்றும் கருதிவிடாதீர்கள். சென்னை சர்க்காரும் போட கொஞ்சம் வரிகளை கையில் வைத்திருக்கின்றார்கள்; அது அடுத்த மாதம் தெரியும். ஏனென்றால், இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற அந்தந்த மாநில சர்க்கார்களும் புது வரிகள் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எப்படித் திரட்டுவர்?

"ரூ. 4,800 கோடியை எப்படி திரட்டப் போகிறார்கள் என்பதற்கு— இவர்கள் போட்டிருப்பது—மக்களிடம் கடனாக ரூ. 700 கோடியும், சேமிப்பு மூலமாக ரூ. 500 கோடியும், இரயில் கட்டணம் மூலம் ரூ. 150 கோடியும், 'பிராவிடண்டு பண்டு டிபாசிட்' மூலம் வந்திருக்கும் பணத்திலிருந்து இவர்கள் ஒதுக்க விரும்புவது ரூ. 250 கோடியும், வெளி நாட்டு உதவி—கடன் மூலமாக ரூ. 800 கோடியும், துண்டு விழும் தொகையில் ரூ. 1,200 கோடியும்-ஆக இப்படி திரட்டப் போகிறார்கள்!

நோட்டடிப்பர்?

"துண்டுவிழும் தொகையை எப்படி சரிகட்டப்படும் என்று தெரியவில்லை; அதற்கு நோட்டடிப்பார்களோ என்னவோ!

"நோட்டடித்தால் பணவீக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் ஏறும்; வரியினால் மட்டுமல்ல—பணவீக்கத்தினாலும் விலைவாசிகள் ஏறும்; அதையும் நாம் தாங்கவேண்டும்.

என்ன வகைகளோ!

"இப்பொழுது இருக்கும் வரிகள் மூலம் கிடைப்பது ரூ. 350 கோடி. இந்த ஐந்தாண்டு காலத்திற்குப் போடவேண்டிய வரி ரூ. 450 கோடி! வேறுவகைகள் மூலம் ரூ. 400 கோடிக்குப் போட்டிருக்கிறார்கள் — என்ன வகைகளோ! அதுவும் இறுதியில் வரியாகத்தான் முடியும்.

"இவ்வளவு பணமும் வந்து சேர்ந்தால்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறும். அப்படி நிறைவேறினால் நமக்குக் கிடைக்கும் இலாபம் எவ்வளவு தெரியுமா? ஒரு ஆண்டிற்கு சராசரி வருமானம் ஒரு மனிதனுக்கு ரூ. 331 தான் வரும்.

நமக்குப் பயன்படுமா?

"இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரிகள் மூலம் கிடைக்கக்கூடிய ரூ. 93 கோடியும் நமக்குப் பயன்படுகிறதாவென்றால், இல்லை. அங்கே கட்டுகின்ற ஹிராகுட் அணை; தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்; பக்ரா-நங்கல் திட்டம் ஆகியவைகளுக்குத்தான் பயன்படுமே தவிர நமக்கு அல்ல!

நீண்டு செல்லும் திட்டங்கள்

"இன்னொன்றையும் கவனியுங்கள்! இந்த வரிகள் நமக்கு மட்டும் ஏறுகிறதென்று கருதாதீர்கள்! ஒரு அணைக்கட்டு ரூ. 100 கோடி என்றுதிட்டமிட்டு இந்த வரிகளை போட்டபின், அந்த அணைக்கட்டு ரூ. 125 கோடியாக ஏறுகிறது. சிமெண்டு, இரும்பு விலைகளும் அணைக்கட்டுகளின் 'எஸ்டிமேட்டில்' ஏறுகிறது.

"உதாரணத்திற்குச் சொல்லுகிறேன் — தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்திற்கு முதல் 'எஸ்டிமேட்' தொகை ரூ. 78 கோடிதான்; பின் அடுத்த ஆண்டு ரூ. 78 கோடி போதாதென்று ரூ. 86 கோடியாக உயர்த்தினார்கள். பிறகு வரிகளும் விலைவாசிகளும் ஏறியதால் அது ரூ. 98 கோடியாகவும், பிறகு ரூ. 103 கோடியாகவுமாகி, இன்றைய நிலையில்—வரி போடுவதற்கு முன்னால் அது ரூ. 110 கோடியாக மாறியிருக்கிறது. இனி புதுவரிகளால் இந்த ரூ. 110 கோடி எங்குபோய் நிற்குமோ!

இவைகள் அங்கே!

"வரி போடுவதற்கு முன், அங்கே வரும் திட்டத்திற்கு போட்ட 'எஸ்டிமேட்' தொகை பட்டியலில் பக்ரா-நங்கல் திட்டம் ரூ. 176 கோடி; தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் ரூ. 110 கோடி; ஹிராகுட் அணைத் திட்டம் ரூ. 100 கோடி; சம்பல் நதித் திட்டம் ரூ. 62 கோடி; கோசி நதித் திட்டம் ரூ. 46 கோடி; ரிகாந்த் அணைக்கட்டுத் திட்டம் ரூ. 45 கோடி; கொய்னா நதித் திட்டம் ரூ. 55 கோடி; சக்கரவார் திட்டம் ரூ. 11 கோடி - இவ்வளவும் அங்கே!

நமக்கு இங்கே!

"இங்கே நமக்கு - தென்னாட்டில் வாயிருக்கும் பெரிய அணைக்கட்டுத் திட்டம் - துங்கபத்திரா அணைக்கட்டுக்கு ரூ. 46 கோடி; இதுதான் பெரிய திட்டம்!

"அடுத்த பெரிய திட்டம் - கீழ் பவானி திட்டம் ரூ. $9\frac{1}{4}$ கோடி; மணிமுத்தாறு திட்டம் ரூ. $3\frac{3}{4}$ - கோடி; மலம்புழா திட்டம் ரூ. - $3\frac{1}{2}$ கோடி; ஆரணியாற்றுத் திட்டம் ரூ. $1\frac{1}{4}$ கோடி; காவிரியாற்றுத் திட்டம் ரூ. $2\frac{3}{4}$ கோடி; இவைகளெல்லாம் இங்கே தென்னாடு முழுவதற்கும்!

"அங்கே நிறைவேறுகிறது — நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில்; அவைகள் நிறைவேற இங்கிருந்து பணம் போகின்றது!

வஞ்சனை அல்லவா?

"நமக்காக நிறைவேறும் ரூ. - $9\frac{1}{4}$ கோடி மதிப்புள்ள மணிமுத்தாறு திட்டத்திற்கு செலவழிக்கப்படும் தொகை முழுதும் அவர்கள் கொடுத்து அல்ல - ஒரு பங்கு மத்திய சர்க்கார்; ஒரு பங்கு சென்னை சர்க்கார்; ஒரு பங்கு அங்குள்ள விவசாயிகளும் - குடியானவர்களும் சேர்ந்து தருகிறார்கள்! ஆனால் அங்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள் செலவில் நிறைவேறுகின்றன பெரும் பெரும் திட்டங்கள்!

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

மத்திய அமைச்சர்

இல்லத்தின்முன் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, மே 30—

நாடெங்கும் பொதுவாக தற்போது நிலவிவரும் ஊதியமுறையைத் திருத்தி அமைத்து, தற்போதய நிலைக்கு ஏற்றவாறு நியாய அடிப்படையில் ஊதியம் நிர்ணயிக்க வேண்டும் என்று கிளர்ச்சி நடைபெற்று வருகிறதல்லவா?

5,000-க்கு மேற்பட்ட மத்திய அரசாங்க ஊழியர்கள் அணிவகுத்துச் சென்று மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இரண்டாவது ஊதிய நிர்ணயக் குழுவை நியமிக்குமாறும், மற்றும் சில முக்கியக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை அவர்கள் அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்.

தாளமுத்து கொலை எதிரொலி

மேலும் மூவர் கைது

தூத்துக்குடி, மே 30—

தோழர் தாளமுத்து கொலை சம்பந்தமாக போலீஸ் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

இந்தக் கொலை சம்பந்தமாக இன்று மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாளமுத்து தனது வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுச்சொன்ன நபர்களில் இன்று கைது செய்யப்பட்டுள்ள மூவரில் இருவர் நேரடியாக சம்பந்தம் கொண்டவர்கள் என்றும், ஒருவர் கொலை நடந்த இடத்தில் இருந்துகொண்டு கொலை செய்யத் தூண்டியவர் என்றும் தெரிய வருகிறது.

இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் செந்தூர் பாண்டியன், செந்தூரான் ஆகிய இருவரும், கொலை செய்யத் தூண்டியதாக ஏசய்யாவும் கைது செய்யப்பட்ட மூவராவர்.

பர்மா சிறையில்

திலகருக்கு நினைவுச் சின்னம்

புதுடில்லி, மே 30—

பர்மாவில் மாண்டலே சிறையில் திலகரின் நினைவாக வகுப்பு நடத்தவும், சொற்பொழிவுகள் நிகழ்த்தவும் ஒரு மண்டபம் கட்டும் யோசனைக்கு பர்மா அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது என்றும், இந்திய அரசாங்கம் ரூ. 35,000 செலவிட முடிவு செய்துள்ளது என்றும் இந்த தொகையுடன் 'திலகர் மண்டபம்' கட்ட முடிக்க இயலாவிட்டால் பர்மாவில் உள்ள இந்தியர்களே மேலும் ரூ. 7,5000 நன்கொடையளிக்க முன் வந்துள்ளனர் என்றும் மக்கள் சபையில் வெளி விவகார அமைச்சர் இலக்குமிமேனன் தெரிவித்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

சோழக்கூர்:
(சிதம்பரம் வட்டம்)
வ. உ. சி. திடலில் அமைந்துள்ள வள்ளுவர் அரங்கில்
3—6—57 மாலை 4 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்: டி. பி. வேலு
கொடியேற்றுபவர்:
எஸ். மணி
பேசுவோர்:
தில்லை வில்லாளன்
பொன்-சொக்கலிங்கம்
இரத்தின-பாலகுருசாமி
இரா. சக்கரவர்த்தி
புலவர் ஆறுமுகம்
லா. ந. இராமலிங்கம்
செல்வி இளங்கோ

★

வடவழி:
தி. மு. கழகத் திடலில்
2—6—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
சு. ஆறுமுகம்
ஆ. சா. நடராசன்
சி. டி. தண்டபாணி

★

சேலம் — பள்ளப்பட்டி:
பள்ளப்பட்டி மூன்று ரோடில்
4—6—57 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் திறப்பு விழா
தலைவர்: பி. தீர்த்தமலை
திறப்புவிழா:
கே. ஏ. மதியழகன்
கொடியேற்றுபவர்:
இ. ஆர். கிருட்டிணன்
பேசுபவர்:
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

சேனப்பநல்லூர்:
3—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்:
எஸ். எம். தம்பிதுரை
பேசுவோர்:
அன்பில் தருமலிங்கம்
எஸ். நெடுமாறன்
ஏ. கலியபெருமாள்
கே. மருதமுத்து
எம். சோமசுந்தரம்

★

தேவகோட்டை:
நேதாஜி சதுக்கம்
4-6-57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: வீ. வீரப்பன்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
இராம வெள்ளையன்
குரு. இதயமணி

பாராட்டுக் கூட்டம்

3—6—57 மாலை 6 மணிக்கு, சலகண்டபுரம் தி. மு. கழகச் சார்பில், திரு. வி. க. திடலில், தோழர் நே. எஸ். சின்னப்பன் தலைமையில், தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ; டி. இருசப்பன் எம்.எல்.ஏ; ஆகியோருக்கு பாராட்டுப் பொதுக் கூட்டம் நடைபெறும்; தோழர் என். எஸ். இளங்கோ, ப. கண்ணன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். எம்.எல்.ஏ.க்கள் நன்றியுரையாற்றுவர்.

புதுவரிகள் கண்டனப் பொதுக் கூட்டம்

2—6—57 மாலை 6 மணிக்கு வாணியம்பாடி தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். பி. வடிவேல் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; தோழர்கள் ஏ. கே. வில்வம், கருத்தோவியன், ஆ. கூத்தரசன், க. நெடுஞ்சோழன், முல்லை சத்தி, ஜி. எஸ். ஆனந்தன், வி. என். நந்தப்பன் ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

2—6—57 காலை 9 மணியளவில் சென்னை 46-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தேனாம்பேட்டை திருவள்ளுவர்சாலை, எண்-1. கழகப் பணிமனையில் 'ஒற்றுமை' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணங்கள்

2—6—57 காலை 9 மணியளவில், தோழர் வி. வி. சேர்மகனி—தோழியர் மா. குருவம்மாள்; தோழர் பேச்சுமுத்து—தோழியர் மா. பெத்தனாட்சி; தோழர் சி. சிவசாமி—தோழியர் க. இந்திராணி ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள், சென்னை—வண்ணையம்பதி, சோலையப்பன் தெரு, 3-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழியர் ஜெகஜோதிநாகராசன் தலைமையில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எஸ். பி. டி. திராவிடமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

2—6—57 காலை 8-30 மணி அளவில் கீரக்களூர் தோழர் ஆர். கோபாலகிருட்டிணன் — தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் க. அறிவழகன் தலைமையில் நடைபெறும். அதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—நன்றி.

* * *

2—6—57 காலை 9 மணிக்கு, சென்னை—அடையார் அடுத்த திருவான்மியூர், கிழண்டை மாடவீதி, சமாதிசெட்டி சத்திரத்தில் தோழர் சா. செல்வராசன்—தோழியர் ஏ. கோகிலாம்பாள் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் சைதை - சம்பந்தம் தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழர் இரா. செழியன் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

2—6—57 காலை 9 மணிக்கு, நெல்லிக்குப்பம் 2 - அக்ரகாரம், 7/10 இராசகோபால்(நாயகர்) இல்லத்தில் தோழர் கி. வைத்திநாதன்—தோழியர் சா. தேவகி வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் நே. எம். வேலு தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., நே. ஜி. சாமிநாதன், எம். ஏ. சண்முகம், ஜி. கோவிந்தராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

3—6—57 அன்று (மதுரை மாவட்டம்) எட்டிமங்கலம் தோழர் ந. இராமலிங்கம்-தோழியர் திருவையாறு வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும்.

* * *

3—6—57 இரவு 8 மணிக்கு முடச்சிக்காடு தோழர் எம். ஆர். கோவேந்தன்—தோழியர் கண்ணம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் வி. அருணாசலம் தலைமையில், மணமகன் இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

2—6—57 காலை 9-30 மணிக்கு சென்னை தோழர் மு. ர. குமார்—தோழியர் வத்சலா வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் பால்வண்ணன் தலைமையில் ஆதம் மார்க்கட்டிற்கு அருகாமையில் உள்ள அருகுகான்பகதூர் தெரு, 34-வது எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் ஏ. கே. வில்வம், முரசொலி சொர்ணம், மா. மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

சின்னமனூர் இளங்கோ படிப்பக 4-ம் ஆண்டுவிழா

3—6—57 மாலை 6-30 மணிக்கு மேற்படி படிப்பக 4-ம் ஆண்டுவிழா, சங்கிலி செட்டியார் திடலில் திரு. பழனியப்பன் தலைமையில் நடைபெறும்; அதுபோது பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ; வீ. வீரப்பன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.